பக்கங்கள்: 11

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 03 செவ்வாய்க்கிழமை 20.09.2022 கதிர் 317

இது ரகசியம் அல்ல!

தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டம் சமுகமாகவே நடந்து முடிந்திருப்பதாகவே காட்டப்பட்டிருக்கின்றது. கூட்டத்துக்கு வந்திருந்தவர்கள் பலர் கூட அப்படித்தான் எண்ணியிருப்பார்கள்.

ஆனால், கூட்டத்தில் அடிமட்டக் கயமைத்தனம் ☞2

# குருந்தூர்மலை நில ஆக்கிரமிப்பை ஆட்சேபித்துத் தொடர் போராட்டம்!

## நாளை முதல் நடத்த முஸ்தீபு

(சண்முகம் தவசீலன், ந. லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 20

குருந்தூர்மலைப் பகுதியில் தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமித்து இனப் பரம்பலை மாற்றியமைக்கும் நடவடிக்கைக்கு எதிராக நாளை முன்னெடுக்கப்படவிருக்கும் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ☞10




# மேற்கு நாடுகள் தமிழர்களின் விடயத்தை பகடைக் காயாகப் பயன்படுத்துகின்றன!



## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. விசனம்

மன்னார்,செப். 20

சர்வதேசத்தைப் பொறுத்த வரையில், அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு தமிழர்களின் விடயங்களைப் பகடைக் காயாகப் பயன்படுத்துகின்றன எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். (விரிவான செய்தி 10ஆம் பக்கத்தில்)

# உலகில் உணவுப் பணவீக்கம்; இலங்கைக்கு நாலாவது இடம்



செப்டம்பர் 2021 முதல் ஒகஸ்ட் 2022 வரை, 53 நாடுகளில் உணவுப் பாதுகாப்பு குறித்த புதிய அறிக்கையை உலக வங்கி வெளியிட்டுள்ளது. ☞9

# தேசிய சபை மீது விவாதம் இன்று நாடாளுமன்றத்தில்

நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் தேசிய சபையொன்றை ஸ்தாபிப்பதற்கான பிரேரணையை ஆளும் கட்சி நாடாளுமன்றத்தில் முன் வைக்கவுள்ளதுடன் அது தொடர்பான விவாதம் இன்று மாலை 5.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு நாடாளுமன்றம் கூடவுள்ளது.

# பிரிட்டன் ராணிக்கு நேற்று பிரியாவிடை



பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத்துக்கு லட்சக்கணக்கானோர் நேற்று பிரியாவிடை கொடுத்தனர்.

ராணிக்கு இறுதி மரியாதை நிகழ்வில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இந்திய குடியரசு தலைவர் திரௌபதி முர்மூ, பிரான்ஸ் அதிபர் எமானுவேல் மக்ரோங் உள்ளிட்ட உலக தலைவர்கள் பங்கேற்றனர்.

வெளிநாடுகளைச் சேர்ந்த அரச குடும்பத் தலைவர்களும் உலக தலைவர்களும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டனர்.. உலகளவில் கோடிக்கணக்கானோர் இந்த நிகழ்வை பார்வையிட்டனர். ☞9

# உக்ரைனில் ரஷ்யப் படை வசம் சிக்கிய 7 இலங்கையரும் மாணவர்கள் அல்லர்!

## சட்டவிரோத குடியேற்ற முயற்சியாளர்களாம்

உக்ரைனின் கார்கிவ் நகரில் ரஷ்ய படையினரால் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 7 இலங்கையர்களும் மருத்துவ மாணவர்கள் அல்லர் என வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ☞10



# நாட்டின் உள்விவகாரத்தை ஜெனிவா அரங்குக்கு முதலில் எடுத்துச் சென்றவர்கள் மஹிந்த,வாசுவே!

## உண்மையைப் போட்டுடைக்கின்றார் சம்பிக்க ரணவக்க

நுவரெலியா,செப்.20

மஹிந்த ராஜபக்ஷ, வாசுதேவ நாணயக்கார ஆகியோரே முதலாவதாக நாட்டின் உள்ளக விவகாரத்தை சர்வதேச அரங்கிற்கு கொண்டு சென்றார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற அவரது 43ஆவது படையணியின் குழு கூட்டத்தில் கலந்துக்கொணடு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மேற்குலக ஆதிக்கம்,மற்றும் போராட்டம் ஆகியவற்றை தொடர்ந்து சமாதானத்தை நிலை நாட்டுவதற்காக ஐக்கிய நாடுகள் சபை ஸ்தாபிக்கப்பட்டது.1996ஆம் ஆண்ட சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான மாநாடும் இடம்பெற்றதை தொடர்ந்து ஐக்கிய நாடுகள் மனித ☞9



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று அரங்கேறி இருக்கின்றது. அது மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

நேற்று முன்தினம் மத்திய குழுக் கூட்டத்தில் அடுத்த தேசிய மாநாடு குறித்துப் பேசப்பட்டது என்று கூறப்பட்டாலும், அதையும் தாண்டி முக்கிய விடயம் ஒன்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல நகர்த்தப்பட்டு இருக்கின்றது.

அது - கட்சியின் சிரேஷ்ட தலைவர் சம்பந்தன் ஐயாவை பலவந்தப்படுத்தி எம்.பி. பதவியில் இருந்து ராஜினாமாச் செய்ய வைத்து, அரசியலில் இருந்து ஓரம் கட்ட வைக்கும் முடிவுதான்.

கட்சி மட்டத்தில் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் தங்களுக்குள் பேசி, யதார்த்த நிலையைக் கவனத்தில் எடுத்து, அதன் அடிப்படையில் தீர்மானித்து, இப்படியான வேலையைச் செய்வது வேறு.

அந்த எம்.பி. பதவிக்கு அடுத்த நிலையில் காத்திருப்பவர் ஆள்களைக் கூட்டி வந்து, திட்டமிட்டு ஒப்பேற்றுவது வேறு. இரண்டாவது வகை அநாகரிகமான செயல் என்று நான் நினைக்கிறேன்.

அது எனது ஊர். நான் அந்த மண்ணின் மைந்தன். அது பற்றிய பற்று எனக்கும் உண்டு. அந்த மண் பறிபோவதைத் தடுப்பதில் சம்பந்தன் உட்பட்ட கூட்டமைப்புத் தலைமை மெத்தனமாக இருப்பதில் எனக்கும் பலத்த சீற்றங்கள் உண்டு. இது விடயத்தில் சம்பந்தன் மீது தனிப்பட்ட கோபம் கூட எனக்கு உள்ளது. அது வேறு விடயம்.

ஆனால் கூட்டமைப்புத் தலைவரை, அவர் வயது முதிர்ந்து பணியாற்ற முடியாத நிலையில் இருந்தாலும், அவர் பற்றிய விடயத்தைக் கையாள்வதில் ஒரு கௌரவம் - முறைமை - இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

நாளை மாகாண சபை தேர்தல் என்று வந்தால் நிச்சயம் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா அதில் முந்திக் கொண்டு முதலமைச்சர் பதவிக்குத் தலையை நீட்டிக் கொண்டு நிற்பார். சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் வழமை போல யாழ் மாவட்டக் கிளையை அவசரப்பட்டுக் கூட்டி, எங்கள் முதல்வர் வேட்பாளர் மாவை சேனாதிராசாவே என்று அறிவிக்கவும் கூடும்.

ஆனால் அப்போது மாவை சேனாதிராசா அந்தப் பதவியைக் கையாளக்கூடிய உடல், உளத் தகுதியோடு இருக்கின்றாரா? முதலமைச்சர் பணி ஆற்றக்கூடிய அடிப்படைத் தகுதி, திறமை அவருக்கு உண்டா? - என்று கேள்வி கேட்க யாருக்கும் திராணி இருக்காது. கேட்கவும் மாட்டார்கள். ஆனால் இன்று சம்பந்தனிடம் அது பற்றி கேட்க முற்படுகின்றார்கள்.

அப்படி கேட்பதில் தப்பில்லை. ஆனால் காதும் காதும் வைத்தால் போல அது குறித்து பேசுவது வேறு, பகிரங்கமாக மத்திய குழு கூட்டத்தின் மத்தியில் பேசி நடவடிக்கை எடுக்க முற்படுவது வேறு.

விடயத்துக்குள் இறங்க முதல் இவ்விகாரத்தை ஒட்டி நேற்று முன்தினம் கூட்டம் முடிந்த பின்னர் செய்தியாளர் சந்திப்பில் 'சமாளிப்பு முறைமையில்' பேச்சாளர் சுமந்திரன் கூறியவற்றை பார்ப்போம்.

**சுமந்திரன் சொன்னவை**

*"திருகோணமலையில் தற்போது ஏற்பட்டுள்ள சவால் குறித்துப் பேசினோம். குறிப்பாக திருக்கோணஸ்வரத்திற்கு சொந்தமான மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து ஆராயப்பட்டது. இது தொடர்பாக கட்சியினால் சில குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இந்த விடயங்களை உடனடியாக ஆராய்ந்து அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்துக்கு முன்னதாக அனைவருக்கும் அனுப்பி வைக்குமாறு அக்குழுக்கள் பணிக்கப்பட்டுள்ளன.*

*"அதேவேளையில், திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களது வாழ்விடங்களுக்கு ஏற்பட்டுள்ள மிக மோசமான பாதிப்புக்கள் குறித்து திருகோணமலையில் இருந்து கட்சி மாவட்ட மட்ட உறுப்பினர்கள் தமது கருத்துக்களைக் கூட்ட ஆரம்பத்தில் பகிர்ந்து சென்றிருக்கிறார்கள். இந்த விடயங்கள் சம்பந்தமாக கட்சித் தலைவர், சிரேஷ்ட உபதலைவர், கட்சி செயலாளர் ஆகியோருடன் நானும் சென்று எங்களுடைய பெரும் தலைவர், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இரா.சம்பந்தனைச் சந்தித்து இவற்றைக் கையாள்வது குறித்த உபாயங்கள் தொடர்பாகப் பேசுவது என முடிவு எடுத்துள்ளோம்."*

- இவை சுமந்திரன் சொன்னவை. இனி விடயத்துக்கு வருவோம்.

திருகோணமலையிலிருந்து ஏழு, எட்டு இளைஞர்களைக் கட்சியின் மாவட்டத் தலைவர் குகதாசன் இந்த மத்தியக் குழுக் கூட்டத்திற்குக் கூட்டி வந்திருந்தார். அவர்கள் மத்திய குழு உறுப்பினர்கள் அல்லர். இப்படி அவர் ஆள்களைக் கூட்டி வருகின்றமை குறித்து நேரத்துடன் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அறிவிக்கப்பட்டு, அதற்கு அனுமதியும் அவரிடமிருந்து கிடைக்கப் பெற்றிருந்தது என்பதை என்னால் உறுதிப்படுத்த முடிந்தது.

மத்திய குழுக் கூட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்க முன்னரே கூட்டத்துக்கு வந்திருந்தோர் முன்னிலையில் குகதாசன் கூட்டி வந்தோர் ஒரு நீண்ட பட்டோலையை அங்கு வாசிக்க அனுமதிக்கப்பட்டனர்.

வயது தளர்ந்து போன சம்பந்தன் ஐயாவின் செயற்றிறனின்மையால் திருகோணமலை மண் பறிபோவதைத் தடுக்க முடியவில்லை. அவர் உடனடியாக எம்.பி. பதவியை ராஜினாமா செய்து வழிவிட வேண்டும். இல்லையேல் 'அறகலய' போராட்டம் போன்ற ஒன்று திருகோணமலையிலும் வெடிக்கும் என்ற சாரப்பட சம்பந்தன் ஐயாவை போட்டுப் பிழித்தனர் குகதாசன் கூட்டி வந்த அணியினர்.

அதை ஒட்டி மத்திய குழுக் கூட்டத்திற்கு வந்திருந்தோர் மத்தியிலேயே பகிரங்கமாக ஆராயப்பட்டது.

சுமந்திரன் தான் சம்பந்தன் ஐயாவைப் பதவியை ராஜினாமா செய்யுங்கள் என்று மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கேட்டு விட்டேன், அவர் சாதகமாகப் பதில் தரவில்லை என்று பகிரங்கமாக சம்பந்தனுக்கு 'ஸேம் சைட் கோல்' அடித்தார்

கடைசியில் தலைவர் மாவை, செயலாளர் சத்தியலிங்கம், சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் மற்றும் சுமந்திரன் ஆகியோர் நேரில் போய் சம்பந்தனைச் சந்தித்து அவரை ராஜினாமாச் செய்யும்படி கோருவதென அங்கு பகிரங்கமாகத் தீர்மானிக்கப்பட்டது.

சுமந்திரன் இந்த அணியில் சேர்ந்து வர எனக்கு விருப்பமில்லை, ஆனால் தளர்ந்துள்ள அய்யாவுடன் உரையாட - பேசுவதற்கு - நான் உங்களுக்குத் தேவை என்பதால் வருகிறேன் என்றார்.

அப்படியானால், சம்பந்தனைப் பதவி விலகக் கோரும் அணியில் சுமந்திரனும் செல்வார், ஐயாவுடன் பேசுவார், ஆனால் நான் கேட்கவில்லை, இவர்கள் கேட்கின்றார்கள் என்று மற்ற மூவரையும் காட்டுவதுடன், சம்பந்தன் ஐயாவுக்கு நல்ல பிள்ளையாக நடந்து கொள்ளப் போகின்றார் என்பது தான் அந்த இடைநிலை மொழிபெயர்ப்பாளர் போல பேசப் போகின்றார் என்னும் சுமந்திரனின் நிலைப்பாட்டின் அர்த்தம்.

சரி. யார் இந்தக் குகதாசன்? திருகோணமலை திரியாயைச் சேர்ந்தவர். மூன்று, நான்கு தசாப்த காலம் புலம்பெயர்ந்து கனடாவில் வசித்தவர். ஆனாலும் தமிழ்த் தேசியம் மீது அளவில்லா பற்றும், ஈடுபாடும் கொண்டவர் உண்மையான சேவையாளர். புலம்பெயர் தேசப் பங்களிப்பை திருகோணமலைக்கும் தமிழரசு கட்சிக்கும் வாரி வாரிக் கொட்டியவர். அது பல கோடி ரூபாக்களைத் தாண்டும்.

தனது சுயநலத்துக்காக அவரைக் கனடா பிரஜாவுரிமையைத் துறந்து திருகோணமலைக்கு வரும்படி அழைத்தவர் சம்பந்தன்தான்.

தம்முடன் கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளாகக் கூட்டித் திரிந்தவர் சம்பந்தன். 2020 பொதுத்தேர்தலில் தாம் போட்டியிட மாட்டார் எனவும், குகதாசன்தான் திருகோணமலையில் கட்சியின் தலைமை வேட்பாளர் என்றும் அவரையே நம்ப வைத்தவர் சம்பந்தன்.

ஆனால் கடைசி நேரத்தில் கட்சியினர் கேட்கின்றார்கள் - வலியுறுத்துகிறார்கள் - நான் போட்டியிட வேண்டும் என்று களத்தில் குதித்து, தேர்தலில் குதாசனை இரண்டாவது இடத்துக்குத் தள்ளினார். குகதாசன் அள்ளிக் கொட்டிய முயற்சியில் தான் எம்.பி. பதவியை உறுதிப்படுத்தி கொண்டார் சம்பந்தன்.

பொறுத்துப் பார்த்த குகதாசன் இப்போது சம்பந்தனுக்குக் குழி பறிக்கிறார் - திண்ணையில் அண்ணனின் இடத்தைக் காலி பண்ணினால்தான் தான் அமரலாம் என்ற திட்டத்தில்.

சரி. சம்பந்தன் தளர்ந்து போயிருக்கின்றார். முதுமை. பணியாற்ற முடியவில்லை என்றாலும், அவர் ஒப்பமிடும் ஒரு கடிதத்திற்கு ரணிலில் இருந்து மஹிந்தர் வரை எல்லோரிடமும் ஒரு மரியாதை உண்டு.

அவரைத் துரத்தி விட்டு, குகதாசன் ஐயா வந்தால், அவரால் 'சவுண்டாக' வேலை செய்ய முடியும் என்று திருகோணமலை நம்புகின்றதா? சம்பந்தனாவது முன்னர் எம்.பியாகப் பணிபுரிந்த காலத்தில் உறுதியாக நின்றவர். இவர் குகதாசன் ரொம்ப நல்ல மனிதர். மென்மையானவர். இன்று திருகோணமலை எதிர்கொள்ளும் நெருக்கடிக்கு அவர் பெயருக்கு எம்.பியாக இருக்கலாமே தவிர, மோதி, முரண்பட்டு, துணிச்சலுடன் பிரச்சினைகளுக்குள் புகுந்து, விளையாடும் திறனோ, திடமோ, அறச் சீற்றமோ கொண்டவர் அல்லர். சம்பந்தன் ஐயாவை இப்படித் தளர்ந்து போன காரணத்தைக் காட்டித் துரத்தி விட்டு, அந்த இடத்துக்குக் குகதாசனைக் கொண்டு வருவதில் திருகோணமலையில் இன்று சீறுவோர் இன ரீதியாக அதிக பயனடைவர் என்றோ, அவர்களுக்குத் திருப்தி தரும் பயன் கிடைக்கும் என்றோ நான் நம்பவில்லை. குகதாசனின் மென்மையான சுபாவம் அப்படி.

கூட்டமைப்பில் பத்து எம்.பிக்கள். தமிழரசுக்கு ஆறாவது எம்.பி. சம்பந்தன். பிரச்சினைகள் வந்தால் தமது தலைமை நிலைமை கருதி அவர் நடுநிலைப் பங்கு எடுத்து விடுவார். 'கூட்டமைப்புப் பேச்சாளர்' பதவி விடயத்தில் சம்பந்தனின் நிலைப்பாடு சுமந்திரனுக்கும் பிடிக்கவில்லை என்பது தெரிந்ததுதான். ஆக, சம்பந்தன் போய் குகதாசன் வந்தால் சுமந்திரன், சாணக்கியன் அணியில் இன்னொரு பிளஸ் பொயிண்ட். கலையரசனும் சேர, சுமந்திரனின் கை ஓங்கும். ஆகவே சுமந்திரன் இந்தத் திருகோணமலைத் தரப்பின் நடவடிக்கையை எதிர்க்காமல் ரசிக்கின்றார் அல்லது சகிக்கின்றார் என்று எனக்கு மனதில் படுகிறது.

மாவையின் நிலைமையோ வேறு. தமிழரசின் அடுத்த தேசிய மாநாட்டுக்குப் பிறகு அவர் தலைவராக நீடிப்பாரோ தெரியாது. அதற்கு முதல் அவருக்குப் பழிவாங்கக் கிடைத்த அதிர்ஷ்ட வாய்ப்பு இது.

தாம் தலைவராக இருக்கும் தமது கட்சியின் தேசிய பட்டியல் எம்.பி. பதவியைத் தமக்கு வழங்கும்படி சிவஞானத்தைத் தாம் தூது விட, அதைப் புறம்தள்ளி, தட்டிப் பறித்துத் தன்னை ஏமாற்றி, நயவஞ்சகம் புரிந்தவர் சம்பந்தன் என்று கறுவிக் கொண்டிருப்பவர் மாவை.

இப்போது தான் தலைவராக இருக்கும் போதே அதே சிவஞானத்துடன் போய் சம்பந்தனைப் பதவி விலகுங்கள் என்று உத்தரவிட வாய்ப்பு கிடைத்தமையை அவர் பெரும் பேறாகக் கருதாமல் எப்படி நினைப்பார்?

இதுதான் விதியின் விளையாட்டோ...?

சம்பந்தன் திருகோணமலையில் மற்றவர்களுக்கு இடம் அளிக்காமல், வெட்டித் தான் பார்த்துப் பார்த்து வளர்த்த குகதாசன் இப்போது அவரைக் காலை வாரிவிட்டு, தான் முன்னுக்கு வர, மூட்டைப்பூச்சி மாதிரி காய் நகர்த்துகின்றார். நேற்று முன்தினம் மத்திய குழுவுக்கு வந்த திருகோணமலை இளைஞர்கள் தம்பாட்டில் வந்தவர்கள், தமக்குத் தொடர்பில்லை என்று குகதாசன் கயிறு விட முனைந்தால், அதை மறுப்பதற்கும் தகுந்த ஆதாரங்கள் உண்டு.

சம்பந்தன் கண் போல வளர்த்த சுமந்திரனும், பொறுத்த கட்டத்தில் சம்பந்தனைக் கைவிட்டு, ஜாகா வாங்குகின்றார்.

தாம் வீழ்த்திய மாவை, இப்போது தம்மை வீழ்த்த வருகின்றார்.

சம்பந்தன் பேசாமல் ராஜினாமாச் செய்து விட்டு ஒதுங்கிப் போவதுதான் நல்லது. ஆனால் அதை இப்படிப் பகிரங்க வெளிக்கு வராமல், கட்சி காய் நகர்த்தி சத்தம் சந்தடியின்றிச் செய்திருந்தால் நன்றாகவும் முறையாகவும் இருந்திருக்கும்.

ஆனாலும் என்ன செய்வது? அரசியலில் இத்தகைய கால்வாரல்கள் எல்லாம் சகஜமப்பா....!

- மின்னல் -






# தூதரகத்தை மூடினாலும் அபிவிருத்தி நடவடிக்கைகான உதவிகள் தொடரும்!



## நோர்வே அரசு திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பில் உள்ள தூதரகத்தை அடுத்த ஆண்டு மூடினாலும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான உதவிகள் தொடரும் என இலங்கைக்கான நோர்வே தூதுவர் ட்ரைன் ஜோரன்லி எஸ்கெலாட் தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே தூதுவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

1960 களில் மீன்பிடித் துறையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட 60 வருடங்களுக்கும் மேலாக இலங்கைக்கு நோர்வே வழங்கிய ஆதரவிற்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

மேலும் தகவல் தொழில்நுட்பம் , கடல் மற்றும் கடல் அறிவியலுக்கு கூடுதலாக மீன்வளம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் விவசாயம் ஆகியவற்றில் முதலீடுகளை செய்யுமாறும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

# அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதில் அரச திணைக்களங்கள் பெரும் திண்டாட்டம்!

## நிதிப் பற்றாக்குறையே காரணமாம்

நிதிப் பற்றாக்குறை காரணமாக அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் கடும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமை காரணமாக அந்த நிறுவனங்களின் அத்தியாவசிய சேவைகளைப் பராமரிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக பல முக்கிய அமைச்சுக்களின் செயலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சிலநிறுவனங்களில்அன்றாடநடவடிக்கைகளுக்குத் தேவையான எழுதுபொருள்கள், மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்குவது பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது.

அமைச்சுக்கள் புதிய திட்டங்களை ஆரம்பிப்பது மட்டுமன்றி, ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களையும் பராமரிக்க முடியாமல் திணறி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், சுகாதாரம், கல்வி, நெடுஞ்சாலைகள், வீட்டுவசதி போன்ற அமைச்சுக்களின் ஒப்பந்ததாரர்கள் மற்றும் சப்ளையர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை இருபதாயிரம் கோடிக்கும் அதிகமாக உள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பல அரச நிறுவனங்களில் ஊழியர்களின் சம்பளத்தை வழங்குவதற்கும் கடுமையான நெருக்கடி காணப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இரத்மலானை விமான நிலைய சேவைகள் யாவும் இடைநிறுத்தம்

சர்வதேச விமான நிலையங்களில் ஒன்றான இரத்மலானை விமான நிலைய சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 27 ஆம் திகதி முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்ட இந்த விமான நிலையம் 22 கோடி ரூபா செலவில் நவீனமயமாக்கப்பட்டு தயார்ப்படுத்தப்பட்டது.

இதற்கமைய வாரத்துக்கு மூன்று மாலைதீவு விமானங்கள் அங்கு தரையிறங்கியதோடு தற்போது அந்த விமானங்கள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000 மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

# ஐ.நாவுடன் உடன்பாடு

நாம் இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டி வந்த ஒரு விடயத்தைத் தென்னிலங்கையே மெல்லப் பேசும் நிலைமை இப்போது வந்திருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடம் போய் பொறுப்புக் கூறல், நீதியை நிலை நாட்டல், உண்மையைக் கண்டறிதல் என்று முறையிடுவதும், நாட்டுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட வைப்பதும் தேச விரோதக் குற்றங்கள், அப்படிச் செய்பவர்கள் நாட்டின் துரோகிகள் என்ற சாரப்பட தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ கூறுகின்றார்.

அப்படிப் பார்த்தால் அத்தகைய தேச விரோதக் குற்றங்களை முதலில் புரிந்த துரோகிகள் தமிழர்கள் அல்லர். விமல் வீரவன்ஸவும் அவரின் பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப்போக்குக் கொண்ட தென்னிலங்கை அரசியலாளர்களும் கடந்த 20 ஆண்டுகளாகத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இன்று பெரும் இடதுசாரியாக விமல் வீரவன்ஸ தரப்பினால் மதிக்கப்படுபவருமான வாசுதேவ நாணயக்காரவும்தான்.

இலங்கையின் மனித உரிமை மீறல் பிரச்சினைகளை ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பிடம் முதலில் எடுத்துச்சென்றவர் அச்சமயம் எதிர்க்கட்சியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷதான் என்று இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்தோம். அதனை இப்போது பகிரங்கமாகப் பொது மேடையில் பிரசாரத்துக்காக முன் வைத்திருக்கின்றார் பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப் போக்கில் தனது அரசியலைக் கட்டமைத்து உருவாக்கிய பட்டலி சம்பிக்க ரணவக்க.

"நாட்டின் உள் விவகாரத்தை முதன் முதலில் சர்வதேச அரங்கிற்குக் கொண்டு சென்றவர் மஹிந்த ராஜபக்ஷவும் வாசுதேவ நாணயக்கார போன்றோரும் தான். ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன எனக் குறிப்பிட்டு அவர்களே அந்தத் தளத்துக்கு இலங்கை விடயத்தை முதலில் கொண்டு சென்றனர்" – என்று பகிரங்கமாக கூறியிருக்கிறார் சம்பிக்க ரணவக்க.

"நாடு என்ற ரீதியில் தனித்துச் செயல்பட முடியாது. மனித உரிமைகள், சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்காகவும் இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு அமைப்புடனும் ஒப்பந்தம் செய்துள்ளது." – என்று பகிரங்கமாகச் சுட்டிக் காட்டி ஒப்புக்கொண்டிருக்கிறார் சம்பிக்க ரணவக்க.

இந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் அவர் ஒரு முக்கிய கொள்கை முடிவையும் அவரை அறியாமலேயே ஏற்றுக் கோடி காட்டி இருக்கிறார் என்பது கவனிக்கத்தக்கது.

ஐ.நாவுடன் ஒப்பந்தம் செய்துள்ள நாடு அந்த ஒப்பந்தப்படி தன் கடப்பாட்டை நிறைவு செய்ய வேண்டும். அதனை தன் இறைமையைக் காட்டி, தட்டிக் கழித்து, தவிர்த்து, விலகிச் செயற்பட முடியாது என்ற உண்மைதான் – உள்ளாந்தம்தான் – அது.

ஆனால் இப்படி உண்மையை ஒப்புக் கொள்ளும் அவரும் – சம்பிக்க ரணவக்கவும் – சேர்ந்து அந்த நியாயத்தை நிலை நாட்ட முடியாமல் இறைமை என்ற மாயையைக் காட்டி, அந்தக் கடப்பாட்டை நிறைவு செய்யாமல் இழுத்தடிக்கத் துணை போவதுதான் நாட்டின் துரதிஷ்டம்.

# மீண்டும் ஒரு போராட்டத்துக்கு தாயாராகிறது ஆசிரியர் சங்கம்!

## ஜோசப் ஸ்டாலின் எச்சரிக்கை

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் ஆசிரியர்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் சம்பளம் போதுமானதாக இல்லாததால் எதிர்காலத்தில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரநெருக்கடிக்குள்தள்ளிவிட்ட அரசியல்வாதிகள் தற்போது மக்களின் வரிப் பணத்தில் சுகபோகம் அனுபவித்துக்கொண்டு மக்களின் வாழும் உரிமையை பறித்து வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் மக்களின் போராட்டங்களை




அடக்கி ஆட்சியாளர்கள் ஒருபோதும் வெற்றி பெறமுடியாது என்பதோடு போராட்டம் ஒரு நாள் இந்த அரசாங்கத்தை அழித்துவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# இலங்கையில் ஏன் எரிபொருள்களின் விலைகளை அரசு குறைக்கவில்லை?

## தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் கேள்வி

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்துள்ள போதும் இலங்கையில் ஏன் எரிபொருளின் விலை குறைக்கப்படவில்லை என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் கேள்வியெழுப்பியுள்ளது.

இந்த விடயம் தொடர்பான உண்மையை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

உலகசந்தையில்எரிபொருள்விலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்துக்கு அமைய, ஒவ்வொரு மாதமும் முதலாம் மற்றும் 15 ஆம் திகதிகளில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

அமைச்சரின் வாக்குறுதியின்படி விலைச் சூத்திரத்தை சரியாக நடைமுறைப் படுத்த வேண்டும் என அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# புதிய அரசியல் சக்தி விரைவில் உருவாகும்!

## சம்பிக்க ஆருடம்

அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் எதிர்காலத்தில் புதிய அரசியல் சக்தியொன்று உருவாக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பதுளை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி ராஜபக்ஷ மீண்டும் ஆட்சியைப் பிடிக்கப் போகிறார் என்றும் அது அவர்கள் செய்யப்போகும் பெரிய தவறு என்றும் குறிப்பிட்டார்.



அவர்கள் அரசியலை விட்டு வெளியேற வேண்டிய நேரம் இது, செய்த தவறுகளை திருத்திக்கொள்ளாவிட்டால் எதிர்காலத்தில் அவர்களது அரசியல் இல்லாமல்போய்விடும் எனக் கூறினார்.

# நாடாளுமன்றத்திற்குள் பொதுமக்கள் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் இன்று முதல் நீக்கம்!



நாடாளுமன்றத்துக்குள் பொதுமக்கள் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் நீக்கப்படவுள்ளன.

அதன்படி இன்று முதல் நாடாளுமன்றத்தின் பொது காட்சியகம் திறக்கப்படும் என நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.


கொரோனா சூழ்நிலை மற்றும் பாதுகாப்புக்காரணங்களுக்காக நாடாளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து, கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டியதன் அவசியம் தொடர்பாகக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

இதன்படி நாடாளுமன்றத்தின் பொது காட்சியகம் இன்று திறக்கப்படும் என்பதுடன், அமர்வு இல்லாத நாள்களில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை நாடாளுமன்றத்தைப் பார்வையிட அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

பாடசாலை அதிகாரிகள் நாடாளுமன்ற இணையத்தளத்தின் ஊடாக நாடாளுமன்றத்தை பார்வையிட விண்ணப்பிக்கலாம். மற்றும் 0112 777 473 அல்லது 335 என்ற இலக்கத்துக்கு தொலை நகல் ஒன்றை அனுப்புவதன் மூலம் பாட சாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் நாடாளுமன்றத்தைப் பார்வையிட வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் பல்கலைக்கழக மாணவர் குழுக்கள், அரச பதிவு செய்யப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் இதே வசதியை வழங்க முடியும் என நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# உலகில் உற்பத்தி விநியோகத்துக்கு உரிய சீனாவின் இடத்தை இந்தியா பிடிக்கலாம்!

## உலக வர்த்தக அமைப்பின் இயக்குனர் கருத்து



உலக விநியோகத்திற்காக சீனாவிலிருந்து நாடுகள் வெளியேறுவதால், இந்தியா முக்கிய இடத்தை நிரப்புவதற்கான நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

உலக வர்த்தக அமைப்பின் (WTO) இயக்குனர் ஷிஷிர் பிரியதர்ஷி கருத்துப்படி, சீனா உட்பட பல தெற்காசிய நாடுகளை விட்டுவிட்டு, உற்பத்தியில் பொருத்தமான இடத்தை நிரப்ப இந்தியா ஒரு நல்ல வாய்ப்பாக உள்ளது.

'ஆத்மநிர்பார் பாரத் அபியான்' என்ற ஏற்பாடு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதன் மூலமும், குறைபாடுகளை நிவர்த்தி செய்வதன் மூலமும், உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளை ஏற்பதன் மூலமும் இந்த ஏற்றத்தாழ்வை சரிசெய்ய முயற்சிக்கிறது.

ஷிஷிர் பிரியதர்ஷி, உலகளாவிய மதிப்புச் சங்கிலியைப் பொருத்தவரை, தற்போது பெரும்பாலான நாடுகள் ஒரே நாட்டைச் சார்ந்திருக்க வாய்ப்பில்லை என்று நம்புகிறார்.

செவ்வாயன்று ஏ.என்.ஐயிடம் இடம் பேசிய உலக வர்த்தக அமைப்பின் இயக்குனர், உலகளாவிய மதிப்புச் சங்கிலிக்கான முதன்மை உள்ளீடுகளை ஆதாரமாகக் கொண்டு பெரும்பாலான நாடுகள் ஒரே நாட்டைச் சார்ந்து இருக்க விரும்புவதில்லை என்று கூறினார்.

உலகளாவிய மதிப்புச் சங்கிலிக்கான முதன்மை உள்ளீடுகளைப் பொறுத்த வரையில், இன்று உலக அளவில் பெரும்பாலான நாடுகள், ஒரே நாட்டைச் சார்ந்து இருக்க விரும்புவதில்லை. ஆம், இந்த நாடுகளில் பலவகைப்படுத்த விரும்பும் நாடுகளுக்கு இது வரை சீனா முதன்மையான விநியோகஸ்தராக விளங்கியது" – என்று பிரியதர்ஷி ஏ.என்.ஐயிடம் கூறினார்.

இந்த இடத்தை நிரப்புவதற்கு இந்தியா ஒரு நல்ல வாய்ப்பாக இருப்பதாக நான் நினைக்கிறேன். இந்தியா போட்டித்தன்மை மற்றும் உயர் தொழில்நுட்பத்தை உறுதி செய்ய முடியும், மேலும் இந்தியாவில் வணிகம் மற்றும் வணிக செலவுகளை எளிதாக்க உதவினால் மட்டுமே அது வர முடியும் என்றும் பிரியதர்ஷி ஏ.என். ஐயிடம் மேலும் கூறினார்.

'ஆத்மநிர்பார் பாரத் – இந்தியாவின் உள்நாட்டுமயமாக்கல் முயற்சிகள் எப்படி, எப்போது பலனளிக்கும்' – என்பது குறித்த அமர்வில் அவர் உரையாற்றினார்.

"மேக் இன் இந்தியா அல்லது மேக் ஃபார் தி வேர்ல்ட் என்றால் நாம் தெளிவாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் போது "உலகளாவிய விநியோகச் சங்கிலிகளில் நமது ஒருங்கிணைப்பை இது மெதுவாக்குமா அல்லது துரிதப்படுத்துமா? என்று உலக வர்த்தக அமைப்பின் இயக்குனர் கேட்டார்.

அமெரிக்கா தலைமையிலான இந்தோ – பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பின் (ஐ..பி.இ.எவ்.) வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் இருந்து இந்தியா சமீபத்தில் விலகியதைப் பற்றிய தனது மதிப்பீட்டைக் குறித்து மேலும் பேசிய இயக்குனர், நான்கு செங்குத்துகளிலும் புது தில்லியின் இருப்புக்கு மற்ற நாடுகளுடன் கூட்டில் ஒரு மூலோபாயத்தைப் பெறுவது அவசியம் என்று கூறினார்.

"இந்த மன்றத்தின் தூண்களில் ஒன்றிலிருந்து இந்தியா விலகியுள்ளது. இந்தியா இந்த மன்றத்தில் இருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். ஏனென்றால் நீங்கள் விவாதங்களை வழிநடத்தலாம். ஆனால், பியூஷ் கோயலின் ஒரு குறிப்பிட்ட அறிக்கையைப் படித்தேன். அடுத்த திகதியில் இந்த வர்த்தக தூணில் இணைவதற்கான சாத்தியக்கூறு பற்றிய அறிக்கை. ஒட்டுமொத்தமாக, இந்த மன்றத்தில் உள்ள நாடுகளுடன் நாம் ஒரு மூலோபாய கூட்டாண்மை வைத்திருக்க வேண்டும் என்றால், இந்த நான்கு செங்குத்துகளிலும் இந்தியாவின் இருப்பு முக்கியமானதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன் என்று பிரியதர்ஷி கூறினார்.

இந்த ஆண்டு மே 23 அன்று டோக்கியோவில் நடந்த குவாட் உச்சிமாநாட்டின் ஒருபுறம் அமெரிக்கா மற்றும் இந்தோ – பசிபிக் பிராந்தியத்தின் கூட்டாளர் நாடுகளால் கூட்டாக இந்தோ – பசிபிக் பொருளாதார கட்டமைப்பு (ஐ..பி.இ.எவ்.) உருவாக்கப்பட்டது. விநியோகச் சங்கிலிகள், வரி மற்றும் ஊழல் எதிர்ப்பு, தூய்மையான எரிசக்தி தொடர்பான மூன்று தூண்களை இணைக்க இந்தியா முடிவு செய்தது. ஆனால் வர்த்தக தூணில் இருந்து விலக முடிவு செய்தது.

ஜெனிவாவில் உலக வர்த்தக அமைப்பின் இயக்குநர்களில் ஒருவரான பிரியதர்ஷி, புதுதில்லியில் 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற மைண்ட்மைன் உச்சி மாநாட்டிலும் உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(மூலம்: ஏ.என்.ஐ.)

# தைவான் மீது சீனா கைவைத்தால் அமெ. படைகள் நேரில் இறங்கும்

## ஜோ பைடன் பகிரங்க எச்சரிக்கை

வொஷிங்டன்,செப்.20

தைவான் மீது சீனா படையெடுப்பு நடத்தினால், தைவானை அமெரிக்கப் படைகள் பாதுகாக்கும் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சீனாவின் கடும் எதிர்ப்பை மீறி அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி தைவான் சென்றடைந்தார். அங்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

இதனால் ஆத்திரம் அடைந்த சீனா தைவானை சுற்றி வளைத்து போர் பயிற்சியில் ஈடுபட்டது. ஆனால் அதன் பின்னரும் அமெரிக்க எம்.பி.க்கள் மற்றும் அமெரிக்க மாகாணங்களின் கவர்னர்கள் தொடர்ந்து தைவானுக்கு பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் அமெரிக்கா – சீனா இடையே பதற்றம் நிலவி வருகிறது.

இந்த பதற்றத்துக்கு மத்தியில் தைவானுக்கு 1.09 பில்லியன் டொலர் மதிப்பிலான இராணுவ ஆயுதங்களை விற்க அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நிர்வாகம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் செய்தியாளர்களின் அளித்த பேட்டியில் –

தைவான் மீது சீனா படையெடுப்பு நடத்தினால், தைவானை அமெரிக்கப் படைகள் பாதுகாக்கும்.

உக்ரைனில் இருப்பதைப் போல இல்லாமல், தைவான் மீது சீனப் படையெடுப்பு ஏற்பட்டால், அமெரிக்கப் படை வீரர்கள், தைவானை பாதுகாப்பார்கள். – இவ்வாறு அவர் கூறினார்.



# இந்தியா ஐ.நாவில் வைத்த 13 ஆம் திருத்தச் சட்ட தீர்வை தமிழ்த் தலைமைகள் ஏற்றுக்கொண்டு அமுல்படுத்தவேண்டும்!

## இரா.துரைரட்ணம் அழைப்பு



(கனகராசா சரவணன்);

இலங்கை சிறுபான்மைத் தமிழ் மக்கள் தொடர்பாக ஜெனீவாவில் முதல் முதல் 13 ஆவது திருத்தச்சட்ட தீர்வுத் திட்டத்தை முன்வைத்த நாடு இந்தியா. இது ஒரு நாட்டில் இருக்கின்ற ஓர் இனத்துக்காக பேசியது என்பது ஒரு வரலாற்று சகாப்தமாகும், எனவே, இதனை அனைத்துத் தமிழ்த் தலைமைகள் ஏற்றுக் கொண்டு அதற்கான கட்டுமானப்பணிகள் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு உறுதிபூண அனைத்து கட்சிகளுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா மன்ற தலைவரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான இரா.துரைரெட்ணம் அழைப்பு விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு வாவிக்கரையில் அமைந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எப்,பத்மநாபா மன்ற காரியாலயத்தில் இடம்பெற்று ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் வாழுகின்ற சிறுபான்மைத் தமிழ் மக்கள் தொடர்பாக இந்திய அரசு ஐ.நாவில் இலங்கை சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் தொடர்பாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள் என்ற தொனியில் ஐ.நாவில் இந்திய அரசு முன்வைத்தது என்பது பாராட்டக்கூடியது கௌரத்துக்குரியது ஏற்றுக்கொள்ளக்கூடியது.

பல தசாப்தங்கள் ஐக்கிய நாடுகள் கூடி ஜெனீவாவில் பல தீர்மானங்கள் எடுத்திருந்தாலும் கூட இலங்கை தொடர்பாக ஜனநாயகம், பன்மைத்துவம், வன்முறை அடிப்படை மனித உரிமை மீறல், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விடயங்கள் போன்ற பல விடயங்களுக்கு முடிவு எடுத்திருந்தாலும். இலங்கை சிறுபான்மை மக்கள் தொடர்பான தீர்வுத் திட்டத்தை ஐ.நாவில் முதல் முதல் ஒரு நாடு முன்வைத்தது என்றால் அது இந்திய அரசுதான்.

எனவே, இதனை வடக்கு கிழக்கில் வாழுகின்ற தமிழ் கட்சிகள் புரிந்துகொண்டு இதை சரியாக அமுல்படுத்துவதற்கு சரியான ஒத்துழைப்புகளை நல்கவேண்டும். ஐ.நாவில் இந்திய அரசால் முன்வைக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு அமுல்படுத்தி அதனை அமுல்படுத்துகின்ற விடயத்தை வடக்கு கிழக்கில் அதற்கான கட்டமைப்புக்களை மேற்கொள்ளுவதற்காக மாகாணசபை தேர்தல்கள், மாகாணசபை முறைமைகள், அதிகாரப்பரவலாக்கல் போன்ற தமிழ் மக்களுக்குரிய ஆரம்பக் கட்டுமாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு நாங்கள் உறுதிபூணவேண்டும்.

அது இல்லாதபட்சத்தில் கடந்த 32 வருடங்களுக்கும் மேலாக நாங்கள் அதனை ஏற்றுக் கொள்ளாதவர்களாகப் பார்த்தும் பாராதவர்களாக செய்யக்கூடியவர்கள் செய்யாமல் செல்லுகின்ற சூழ்நிலைக்கு செல்லாமல் தமிழ்த் தலைமைகள் ஏற்றுக்கொண்டு அதற்கான கட்டுமானப்பணிகளை - செயற்திட்டங்களை - அமுல்படுத்துவதற்கு உறுதிபூண அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

அரசாங்கம் பொருளாதாரத் திண்டாட்டங்களில் உள்ள சூழ்நிலையில் - இந்தியா உட்பட பல வெளிநாடுகள் பொருளாதார ரீதியான உதவி செய்துள்ள இந்த சூழ்நிலையில் - இலங்கையில் ஒரு பாமர மக்கள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரையும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டு ஒரு நேர உணவை உண்ண முடியாதளவிற்கு விலை ஏற்றம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 4 மாதங்களுக்கு முதல் விற்கப்பட்ட பொருளின் விலைப்பட்டியலுக்கு மேல் இன்று பல ரூபா அதிகரித்த விலைகளைகொண்டசிறியஸ்ரிகர் ஒட்டி பொருள்களை விற்பனை செய்கின்றனர்.

எனவே விலைகளை முறைகேடாக அதிகமாக விற்பனை செய்கின்றவர்களை ஏன் இதுவரை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை? நிறுத்துவதற்கு அரசு உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்துக்குரிய அபிவிருத்திக்குழு தலைவர் மீள்பரிசீலனை செய்யப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளது அந்த சூழ்நிலையில் ஒருவாரத்துக்கு மேலாகியும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அபிவிருத்திக்குழுத் தலைவர் நியமிக்கப்படவில்லை. எனவே தற்போது வறுமை தாண்டவம் ஆடும் இந்த நேரத்தில் விரைவாக அபிவிருத்திக்குழுத் தலைவரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்றார்.

## தாமரைக் கோபுரத்தைப் பார்வையிட அலைமோதும் அதிகளவான மக்கள்!

### சனிக்கிழமை வரை 70 லட்சம் ரூபா வருமானம்

கொழும்பில் உள்ள தாமரை கோபுரத்துக்கு ஞாயிற்றுக்கிழமை அதிகளவான மக்கள் வருகை தந்துள்ளதாக தாமரை கோபுரத்தின் முகாமைத்துவ தனியார் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிவரை 6 ஆயிரத்து 800 இற்கும் அதிகமான நுழைவுச்சீட்டுக்கள் விற்பனையாகியுள்ளன என அதன் பிரதம நிர்வாக அதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பெருமளவிலான மக்கள் வருகையால் தாமரைக் கோபுர வளாகத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதையடுத்து, நிலைமையைக் கட்டுப்படுத்த நிர்வாகம் ஞாயிறு இரவு நுழைவுச்சீட்டுக்கள் வழங்குவதை தற்காலிகமாக இடைநிறுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தாமரைக் கோபுரம் திறக்கப்பட்ட 15 ஆம் திகதி முதல் சனிக்கிழமை வரை 70 லட்சம் ரூபா வருமானம் ஈட்டப்பட்டதாக பிரதம நிர்வாக அதிகாரி ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தாமரைக் கோபுரத்தைப் பார்வையிட 500 ரூபா நுழைவுச்சீட்டுக்கள் மட்டுமே தங்போது வழங்கப்படுவதுடன், தினமும் பிற்பகல் 2 மணி முதல் இரவு 10 மணி வரை பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

## பேர்ள் இழப்பீட்டை கண்காணிக்குமாறு கணக்காய்வாளர் நாயகம் பரிந்துரை!

இலங்கை கடற்பரப்பில் தீப்பிடித்து எரிந்த எக்ஸ் பிறஸ் போர்ள் கப்பலால் ஏற்பட்ட சேதத்துக்கான இழப்பீட்டுத் தொகையை மீளப் பெறுவதை கண்காணிக்குமாறு கணக்காய்வாளர் நாயகம் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கப்பலின் சேத மதிப்பீடு மற்றும் நட்டஈட்டை மீளப்பெறும் நடவடிக்கை தொடர்பில் பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட உண்மைகளைக் கருத்திற்கொண்டு நட்டஈட்டை மீளப்பெறும் நடவடிக்கையை கண்காணிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டது.

கப்பலால் ஏற்பட்ட சேதத்துக்கான நட்டஈட்டை மீளப்பெறும் நடவடிக்கை தொடர்பில் பூரண விசாரணை நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக கணக்காய்வாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எக்ஸ் பிறஸ் போர்ள் கப்பல் இலங்கைக் கடலில் மூழ்கிய போது கப்பலில் 81 கன்டெய்னர்களில் ஆபத்தான பொருள்கள் இருந்தன எனவும் அதில் 25 தொன் நைட்ரிக் அமிலம் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யானை தந்தங்களுடன் கைதானவர்களை விடுவிக்க புலனாய்வுத் துறை எனக்கூறி கப்பம்பெற்றவர் கைது!

(க.சரவணன்)

மட்டக்களப்பு, செப். 20

மட்டக்களப்பு நகர் பகுதில் யானை தந்தங்களுடன் கைதுசெய்யப்பட்ட இருவரிம்விசேட அதிரடிப்படையின் புலனாய்வு பிரிவு எனத் தெரிவித்து இருவரையும் விடுவிக்க தலா ஒருவருக்கு இரண்டு லட்சம் ரூபா கப்பமாக கோரி ஒன்றரை லட்சம் ரூபா பணம் ஒருபவுண் தங்க மோதிரம், ஒரு கையடக்க தொலைபேசி என்பவற்றை பெற்றுச் சென்ற சம்மாந்துறையை சேர்ந்த 42 வயதுடைய ஒருவரை கைது செய்துள்ளனர் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது -

கடந்த ஜூன் மாதம் 24 ஆம் திகதி மட்டக்களப்பு ரயில் நிலையத்துக்கு முன்னாள் உள்ள கடை ஒன்றில் வைத்து அம்பாறை விசேட அதிரடிப்படையினரால் கடை உரிமையாளர் ஒருவரை யானை தந்தங்களுடன் கைது செய்தனர்.

இதில் யானை தந்தத்துடன் கைது செய்யப்பட்டவரின் கல்லடி பகுதியைச் சேர்ந்த நண்பன் ஊடாக யானை தந்தம் தேவை எனத் தெரிவித்து, சம்மாந்துறையைச் சேர்ந்த முகமது சலாம் முகமது சலீம் என்பவர் கடந்த ஜூன் 24 ஆம் திகதி யானை தந்தங்களை [illegible] துக்கு முன்னாள் உள்ள கடைக்கு வந்தார். அப்போது விசேட அதிரடிப்படையினர் கடையை சுற்றிவழைத்து சோதனையிட்ட நிலையில் இரண்டு யானை தந்தங்களை மீட்டமையுடன் கடை உரிமையாளர் அவரது நண்பன் ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட இருவரின் கையடக்க தொலைபேசி ஊடாக முகமது சலாம் முகமது சலீம், தான் விசேட அதிரடிப்படையின் சி.ஐ.டி. எனத் தெரிவித்து அவர்களது உறவினர்களுடன் உரையாடி இருவரையும் இதில் இருந்து விடுவிக்கத் தலா இரண்டு லட்சம் ரூபா பணம் கோரினர்.

இதனைத் தொடர்ந்து கடை உரிமையாளரின் உறவினர் மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் வைத்து தற்போது கேட்ட பணம் கையில் இல்லை, 50 ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஒரு சிமாட் போன் மற்றும் கையடக்க தோலைபேசி ஒன்றை யும் வழங்கி பணம் வந்ததும் கேட்ட மீதிபணத்தை கொடுத்து விட்டு கையடக்கத் தொலைபேசியை பெறுவதாக தெரிவித்து அதனைக் கொடுத்துள்ளார்.

இதேவேளை கைது செய்யப்பட்ட கடை உரிமையாளரின் நண்பனின் உறவினரிடம் கல்லடி பொலிஸ் பயிற்சி கல்லூரி சந்தியில் வைத்து ஒரு லட்சம் ரூபா [illegible] மோதிரத்தையும் சி.ஐ.டி. என்ற சம்மாந்துறையை சோர்ந்தவரிம் கொடுத்து மீதி பணத்தை கொடுத்து மோதிரத்தை பெற்று கொள்வதாகத் தெரிவித்து அதனைக் கொடுத்தனர்.

கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்களிடம் இருந்து பணம் மற்றும் தங்க ஆபரணம் கையடக்க தொலைபேசிகளை பெற்ற பின்னர் ஒருவரை விடுதலை செய்துவிட்டு கடை உரிமையாளரை மட்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து அவர் ஜூலை முதலாம் திகதி வரை விளக்கமறியல் வைக்கப்பட்டு பின்னர் 50 ஆயிரம் ரூபா அபதாரம் செலுத்திய நிலையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் கப்பமாக பணம் பெற்றவரிடம் மிகுதி பணத்தை தருவதாகவும் மோதிரத்தை தருமாறு கோரியபோது அவர் அதனை வழங்காத நிலையில் அவருக்கு எதிராக ஜூலை 5 ம் திகதி காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டையடுத்து சம்மாந்துறையில் வைத்து சி.ஐ.டி. எனக் கப்பம் கோரியவரை ஞாயிற்றுக்கிழமை கைது செய்தபின்னர் அவர் தான் கப்பம் வாங்கினார் என ஒப்புக் கொண்ட நிலையில் வாங்கிய பணத்தை குறித்த தவணையில் திருப்பி வழங்குவதாக தெரிவித்த நிலையில் அவரை பொலி

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 126

இந்தியப் படைகள் வெளியேறுவது என்ற தீர்மானத்தைப் புதிய பிரதமர் வி.பி. சிங் அறிவித்த சமயத்தில் பிரேமதாஸா வுடனான பேச்சுக்களில் நம்பிக்கை இழந் திருந்த மதியுரைஞர் பாலசிங்கம் தமிழக முதல்வர் கருணாநிதியின் ஊடாக இந்தி யப் படைகளின் வெளியேற்றத்தைப் பகுதி பகுதியாக நடத்தும் படியும், ஒரு தீர்வு எட்டப்பட்ட பின் முற்றாக வெளியே றும்படியும் கோரினார் எனக் கூறப்பட்டது. எனினும் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப் பட்டது.

இந்திய பிரதமர் வி பி சிங், ஏற்படுத்தப் பட்டுள்ள வடக்கு – கிழக்கு இணைந்த மாகாண சபையில் பதவிகளை ஏற்று, நடக்குமாறு முதல்வர் கருணாநிதியின் அனுசரணை ஊடாக மதியுரைஞரைக் கோரினார். இதையொட்டி சில சுற்று ஊடாட்டங்கள் கருணாநிதி மூலம் விடு தலை புலிகளுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்



வுக்கும் இடையில் நடந்தாலும், அப்படிச் சேர்ந்து இயங்க விடுதலை புலிகள் ஒத்து வரவில்லை. அத்தோடு புலிகள் கேட்டபடி இந்த வடக்கு – கிழக்கு மாகாண சபை பின்னர் பிரேமதாஸாவினால் கலைக்கப் பட்டும் விட்டது.

அதனை இடைக்கால நிர்வாகமாக விடுதலைப்புலிகள் ஏற்று நடத்தலாம் என சம்மதங்களை விடுதலைப்புலிகள் காட்டினாலும், அந்த நேரங்களில் பிரேம தாஸாவும் அவரது அமைச்சர்களும் விடு தலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்ற நிபந்தனையை வைத்த னர். பழையபடி விடுதலைப் புலிகள் இந்த சுருக்குக்குள்தான் அகப்பட்டனர். விடுத லைப் புலிகள் அதை ஏற்கவில்லை. நிரந் தரத் தீர்வு ஒன்று வரும் வரை தமிழ் மக்க ளுக்குத் தங்களது ஆயுதங்கள்தான் பாதுகாப்பு என்பதால் அவற்றைக் களைய முடியாது என்பது அவர்களது வாதம். நாட் டின் ஒரு பகுதி மாகாண சபைகளை ஓர் ஆயுதக் குழு ஜனநாயக ரீதியில் கட்டுப் படுத்தமுடியாதுஎன்பதுபிரேமதாஸாவின் வாதம்.

ஆயுதங்களை ஒப்புக்காகக் கைய ளித்துவிட்டு, எஞ்சியவற்றைப்பாவிக்காது பின்னர் அமைக்கப்படும் பொலிஸ் காவல் நிலையங்களுக்கு உள்வாங்க லாம் என இந்தியத் தரப்பு முன்னர் புலி களிடம் தெரிவித்திருந்தது. அந்த யுக்தி யில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்க ளும் பிரேமதாஸா பின்னர் அமைக்கும் பொலிஸ் நிலையங்களுக்காக தரப்படுப வைகளோடும் இவை பாவிக்கப்படலாம் என மதியுரைஞர் பேசிப் பார்த்தார்.

ஆனால் அது முற்றாக நிராகரிக்கப் பட்டு, விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கையளித்த பின் கலைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத் தலாம் என்பது இலங்கை அரசின் நிலை யாக மாறியது.

திரும்பவும் போர் மூண்டு, உக்கிரம் அடைந்தது. பிரேமதாஸா விடுதலைப் புலிகளால் கொல்லப்பட, பிற்பட்ட காலத் தில் சந்திரிகா பண்டாரநாயக்கா ஜனாதி பதியாக பதவியேற்று 13ஆம் திருத்தத் துக்கும் மேலானது எனப் பலரால் கருதப் பட்ட தீர்வு திட்டத்தை முன் வைத்தாலும், விடுதலைப் புலிகள் அதனை ஏற்க வில்லை. அவருடனான பேச்சுவார்த் தைகளின் தொடக்கத்திலேயே தங்களு டன்தான் தங்களைத் தமிழர்களின் ஏகோ பித்த தலைவர்களாக ஏற்றுப் பேச வேண் டும் என்ற மஞ்சள் காமாலை பார்வை தொடர்ந்தது. கூட்டணியின் பிரதிநிதி யாகப் பங்கு பற்றிய நீலன் திருச்செல்வம் விடுதலைப் புலிகளால் கொலை செய்யப் பட்டார்.

இடையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளை மீளமைப்பதற்கான பணிகளின் நிர்வாகங்களை விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயல்படுவது என சந்திரிகாவினால் ஏற்றுக் கொள்ளப் பட்ட ஒப்பந்தங்களுக்கு, அவரின் கட்சி யில் ஆளுமையாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ சக சிங்களப் பேரினவாதிக ளான விமல் வீரவன்ஸ, கமன்பில்ல போன்றவர்களுடன் சேர்ந்து ஆப்பு வைத் துப் பின்னர் அவரே அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது விடுதலைப் புலிகள் தந்த அனுசரணையுடன் வெற்றி நிறைவேற்று அதிகாரங்கள் அதிகம் கொண்ட ஜனாதிபதியாகவும் மாறினார்.

சந்திரிகா காலத்தில் தொடங்கப்பட்ட நோர்வேயின் சமாதானப் பேச்சு வார்த் தைகள் கூட விடுதலைப் புலிகள் ஏகோ பித்த தலைவர்களாகத் தங்களுடன் தான் பேச வேண்டும் என்று அவர்கள் வைத்த




நிபந்தனையுடன்தான் நடந்தன.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்ததும் படிப்படியாக பேச்சுவார்த்தைகள் குழப்பப்பட்டு, யுத்த நிறுத்தத்தை மீறுகி றார்கள் என்ற காரணங்களுக்காக விடுத லைப் புலிகளின் பழைய தளபதி கருணா போன்றோரைப் பாவித்து கடைசியில் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட வேண் டும் என்ற போர் தொடங்கி முடிக்கப்பட்டது.

இந்தப் போருக்கு கருடன் தான் கவ் விய பாம்பை நிலத்திலிருந்து வானத்தில் கொண்டு பறந்து சர்வதேசத்திடம் தந்து வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

விடுதலைப் புலிகள் தங்களால் இயன் றவரை போராடினர். பிரபாகரன் கூட தன் குடும்பம் முழுவதோடும் வீர மரணத்தைத் தழுவினார்.

அந்த வீர மரணங்களாலும் முள்ளி வாய்க்கால் நிகழ்வுகளாலும் பிரபாகரன் தமிழ் மக்களை நட்டாற்றில் விட்டுவிடவில் லை, சர்வதேசத்தின் நடுவில், ஐ.நாவிடம் பாரம் கொடுத்துத் தங்களது தியாகங்க ளால் தமிழ் மக்களுக்கு விடிவு வரவேண் டும் என்றுதான் விட்டுச் சென்றிருக்கிறார் என கூறப்படுவது உண்டு. அது உண் மையும் கூட.



அதுபோலவே தமிழ் மக்களும் சர்வ தேசத்திடம் தான் இந்த பாதகங்களுக்கு நீதியை எதிர்பார்த்து நிற்கிறார்கள் சர்வ தேச அமைப்புகள் யானை போல ஆடி அசைந்து தான் நடக்கும். அதற்கான காலம், பொறுமை என்பன காக்கப்பட வேண்டும்.

**சாதுரியமற்ற வீரர்களின் விளைவுகள்**

இந்தியப் படைகளை நடத்தும் தளபதி யாகப் பொறுப்பில் இருந்த தீபேந்தர் சிங் தான் ஓகஸ்ட் 1987இல் பிரபாகரனை முதலில் சந்தித்தபோது ஏற்பட்ட எண் ணத்தை இப்படி கூறுகிறார்:–

"எனக்கு அவர் பயங்கரவாதி என்பதி லும் பார்க்க அளவுக்கு அதிகமாகப் பெருத்திருந்த கடைக்காரர் போலத்தான் தெரிந்தார்" என்றார்.

மொழிபெயர்ப்பு, குழப்பங்களை தர லாம் என்பதால் அவரது கூற்றை அப்ப டியே ஆங்கிலத்தில் தருகிறேன்:–

**"He looked to me as an overfed shopkeeper and anything but a terrorist" - (The IPKF in Srilanka - Depinder Singh)**

பதினொரு நாள் நடந்த உக்கிரமான போரில் தான் பிரபாகரனையும் விடுத



லைப் புலிகளையும் யாழ்ப்பாணப் பகுதி களிலிருந்து வெளியேற்றியவர் என பெருமிதம் கொண்டவர் தீபேந்தர் சிங். ஆனால் அந்தத் தின்று கொழுத்த கடைக்காரர் ஒரு லட்சத்துக்கும் மேலான படையணிகளையும் 220 கவச வாகனங் களையும், 100 விமானங்களையும் கொண்டிருந்த தீபேந்தர் சிங்கைத் தங் களை அணுக முடியாமல் கட்டுக்குள் வைத்திருந்தார் என்பது நிஜம். தமிழீழம் அமைய வேண்டும் என்ற இலட்சிய பற்றுறுதி அவற்றின் அத்திபாரமாகவும், ஆயுத பலத்தால் அதனை அடைந்து விடலாம் என்ற நம்பிக்கை வலிமையான பிடிப்பாகவும் அமைந்தமையால் எத்த னையோ பிரதமர்களுக்கும் இராணுவத் தளபதிகளுக்கும் அவரால் தண்ணீர் காட்ட முடிந்தது.

பிரபாகரன் பற்றிய எண்ணங்கள் தீபேந்தர் சிங்குக்கு இருந்தாலும், இரா ணுவ ரீதியாக அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என இந்திய இரா ணுவ உயர் மட்டத்திடம் கடைசி வரைப் போராடியும், பின்னர் மேலதிகாரிகளின் உத்தரவுக்கேற்ப இராணுவ நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு கள் அவருக்கு வந்தன. விடுதலைப் புலி கள் நடத்திய தீரமிக்க போரைப் பற்றிய இராணுவ நடவடிக்கைகளை எடுத்து ஆராய்ந்து எழுதுபவர்கள் இதனை இந்தி யாவின் வியட்நாம் எனக் குறிப்பிடலாம்.

இலட்சியப்பற்றுக் கொண்ட சில போராளிகள் இரும்பு உறுதியுடன், எப்படி உலகின் ஒரு பெரிய படையுடன் போராடி னார்கள் என சரித்திர வாயிலாகக் குறிக்க லாம். இப்படியான தீரமிக்க போராட்டங்கள் கம்போடியர்களால் சீனாவுக்கு எதிராக வும், ஆப்கானிஸ்தர்களால் சோவியத் ரஷ்யாவுக்கும் பின் அமெரிக்காவுக்கு எதிராகவும், வியட்நாமியர்கள் அமெரிக் காவுக்கு எதிராகவும் நடந்தவற்றுடன் தொடர்பு படுத்தி ஆராயலாம்.

ஆனால் வேதனை என்னவெனில், சர்வதேச நடப்புகளை ஒட்டி பின்னிப் பிணைந்து நடத்தப்பட்ட அந்தப் போராட் டங்கள் எல்லாம் வெற்றியை ஈட்டி தந்தன. ஆனால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிக ளின் ஆயுதப்பலம் அழிக்கப்பட்ட பின் தோற்றுப் போனவர்களாக, பாலஸ்தீனர் கள் மாதிரி கல் எடுத்து அடிப்பதற்கும் பயந்த சுபாவங்களில் உலாவி வருகி றார்கள்.

அவர்களுடைய தற்போதைய தலை வர்கள் 'கூடிப் பிதற்றல்ன்றி' காரியமாற் றுபவர்களாகக் காணப்படவில்லை. இந்த நிலையைத் தமிழ் மக்கள் சந்தித்திருக்க வேண்டுமா?

(வளரும்...)

## உலகில் உணவுப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதன்படி, உலகில் உணவுப் பணவீக்கம் அதிகம் உள்ள 10 நாடுகளில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது.

இலங்கையில் உணவுப் பணவீக்கம் 91 சதவீதமாக உள்ளது.

உலகிலேயே அதிக உணவுப் பணவீக்கம் உள்ள நாடு ஜிம்பாப்வே, இது 353 சதவீதம்.

லெபனான் மற்றும் வெனிசுலா முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன.

துருக்கி, ஈரான், அர்ஜென்டினா, மால்டோவா, எத்தியோப்பியா, ருவாண்டா ஆகிய நாடுகள் இந்தப் பட்டியலில் முதல் 10 இடங்களில் உள்ள மற்ற நாடுகள் ஆகும்.

## நாட்டின் உள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உரிமைகள் பேரவை ஸ்தாபிக்கப்பட்டது.

நாடு என்ற ரீதியில் ஒருபோதும் தனித்து செயற்பட முடியாது. மனித உரிமைகள், சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்காக இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் ஒவ்வொரு அமைப்புக்களுடனும் ஒப்பந்தம் செய்துள்ளது.

நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் போது உலக உணவு தாபனமும், மருந்து தட்டுப்பாடு ஏற்படும் போது உலக சுகாதார தாபனமும் தலையிட்டு உதவி செய்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையிடம் நாட்டை காட்டிக்கொடுப்பதாக குறிப்பிடும் தரப்பினர் ஐக்கிய நாடுகள் சபையிடமிருந்து உணவு மற்றும் மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை பெற்றுக் கொள்வதையும் காட்டிக் கொடுப்பாகவே கருத வேண்டும்.

நாட்டின் உள்ளக விவகாரத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே முதலில் சர்வதேச அரங்கிற்கு கொண்டு சென்றார். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் ஆட்சியில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன எனக் குறிப்பிட்டுக் கொண்டு மஹிந்த ராஜபக்ஷவும்,வாசுதேவ நாணயக்காரவும் சர்வதேச அரங்கிற்கு சென்றார்கள்.இவர்களின் அரசியல் பற்றி கதைப்பது நகைச்சுவையானது.

நாடு வரலாற்றில் என்றுமில்லாத வகையில் வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. போர் மற்றும் இயற்கை காரணிகளினாலும், பிற தரப்பினராலும் நாடு வங்குரோத்து நிலையை அடையவில்லை. அரசியல்வாதிகள்,அரச அதிகாரிகளின் தவறான பொறுப்பற்ற தீர்மானங்களினால் இந்த அவல நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டு மக்களை முழுமையாக ஏமாற்றி பொதுஜன பெரமுன ஆட்சியமைத்தது.2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் பிரசார மேடையில் ரஷ்ய ஜனாதிபதி புடின், லீ குவான் யூ, மகதீர் மொஹமட்,அநகாரிக தர்மபால உள்ளிட்ட பல தலைவர்கள் வருகை தந்தார்கள். சிறந்த தலைவர்களுடன் பலவீனமான ஒருவரை ஒப்பிட்டு முழு நாட்டையும் தவறாக வழிநடத்தியவர்கள் இன்று லீ குவான் மற்றும் மகதீர் மொஹமட் ஆக ஒப்பிட்டவர்களைக் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதியின் முட்டாள்தனமான தீர்மானத்தினால் நாட்டின் விவசாயத்துறை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்டத் தொழிற்துறையை தமது வாழ்வாதாரமாக நம்பியுள்ள பெருந்தோட்ட மக்கள் இன்று மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தூரநோக்கமற்ற வகையில் இரசாயன உரம் தடை செய்யப்பட்டமையால் குறுகிய காலத்தில் தேயிலை தொழிற்துறை 40 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

சர்வதேச சந்தையில் 'சிலோன் டி' நாமம் எம்மை விட்டு நீங்கும் அச்சுறுத்தல் நிலையில் உள்ளது. இலங்கையின் தேயிலை தொழிற்துறைக்கு சர்வதேச சந்தையில் போட்டித்தன்மையில் உள்ள இந்தியா,கென்யா ஆகிய நாடுகள் தங்களின் தொழிற்துறையை ஊக்குவிக்க இரசாயன உர நிவாரணத்தை தமது தொழிற்துறையினருக்கு வழங்கியுள்ளன. புதிய கொள்கைத் திட்டங்கள் அறிவு பூர்வமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளன.

விவசாயத்துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்பை சீரமைக்க அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யக் கூட அரசாங்கத்திடம் நிதி இல்லை. ஆனால் அரசியல் தரப்பினரை திருப்திப்படுத்த 38 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ச்எதிர்வரும் நாள்களில் அமைச்சரவை விஸ்திரப்படுத்த அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.- என்றார்.

## பிரிட்டன் ராணிக்கு ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லண்டன் வீதிகளில் ராணியின் சவப்பெட்டி ஊர்வலமாக வின்ட்சர் கோட்டைக்கு கொண்டு செல்லப்படும். அங்கு அவர் அடக்கம் செய்யப்பட்டார்.

இறுதிச் சடங்குக்கு முன்னதாக, அரசர் சார்ல்ஸ் பேசுகையில், இந்த நேரத்தில் தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் மக்கள் அளித்த ஆதரவு தன்னை ஆழமாகத் தொட்டுள்ளது - என்று கூறினார்.









## குருந்தூர்மலை நில ஆக்கிரமிப்பை .........







(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவுமாவட்டத்தின் குருந்தூர் மலை, தண்ணிமுறிப்பு பகுதியில் தமிழ் மக்களின் பூர்வீக 632 ஏக்கர் நிலம் குருந்தூர்மலை பௌத்த பிக்குவின் பங்கேற்போடு கடந்த 11 ஆம் திகதி தொல்பொருள் திணைக்களத்தினால் எல்லைப்படுத்தப்பட்டு நில ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்ட அபகரிப்புக்கு எதிராகவும், இங்கு விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கும் நில அளவீட்டுக்கு எதிராகவும் நாளை 21 ஆம் திகதி மாபெரும் போராட்டம் நடத்த தண்ணிமுறிப்பு கிராம பொது அமைப்புக்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று குமுழமுனை, தண்ணிமுறிப்பு கிராம அமைப்புகளின் தலைவர்கள் இணைந்து மேற்கொண்ட ஊடக சந்திப்பிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குமுழமுனை கிராம அபிவிருத்தி சங்க தலைவர் இ.மயூரன் மற்றும் தண்ணிமுறிப்புக் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் கலைச்செல்வன், தண்ணிமுறிப்பு கமக்கார அமைப்புத் தலைவர் ச.சசிகுமார் ஆகியோர் இந்த ஊடக சந்திப்பை நடாத்தினர்.

இதன்போது குமுழமுனை கிராம அபிவிருத்தி சங்க தலைவர் இ.மயூரன் கருத்துத் தெரிவிக்கையில் –

1953 ஆம் ஆண்டு டிஸ்.சேனநாயக்கா காலத்தில் புனரமைக்கப்பட்ட தண்ணிமுறிப்பு குளத்தின் கீழான நெற்செய்கை காணிகள் ஆக்கிரமிப்பாளர்களின் தூர நோக்குச் சிந்தனை காரணமாக இன்று வரை வனவளத்திணைக்களத்தின் எல்லை பகுதிக்கு உட்பட்டதாக இருக்கின்றது.

இந்த காணிகள் வழங்கப்பட்டு 70 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் இன்று வரைக்கும் காணிகள் கூட வனவளத் திணைக்களத்தினால் விடுவிப்பு செய்யப்பட்டு விவசாய காணிகளாக பதிவுகள் எங்கும் இல்லை. இதன் அடுத்த கட்டமாக 1932 ஆம் ஆண்டு நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை செய்யப்பட்ட வரைபடத்தில் குருந்தூர்மலை தொல்லியல் இடம் என்ற பெயரில்தான் வரைபடம் ஆக்கப்பட்டுள்ளது.

ஆனால் அந்தப் பதிவுகள், ஆவணங்கள் எல்லாம் திரிவு படுத்தப்பட்டு குருந்த விகாரை தொல்லியல் இடம் என்ற பெயரில் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

சிங்களக் குடியேற்றங்கள் எந்தெந்த இடங்களில் தமிழர் பகுதிகளில் நிறுவப்பட்டனவோ அத்தனை இடங்களிலும் முதலில் ஒரு பௌத்த துறவியும், ஆள்களும் வருவார்கள். அதன் பின்னால் தொல்லியல் திணைக்களம் வரும். இருவரும் சேர்ந்து பல ஏக்கர் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வார்கள். அதன் பின்னர் அங்கு சிங்கள குடியேற்றம் நிறுவப்படும். அது தமிழர்களின் உயிர்நாடியான இதயப் பகுதியாகத்தான் இருக்கும். உதாரணமாக திருகோணமலை திரியாய் பகுதியில் வெலிஓயா என்ற சொல்லப்படுகின்ற எமது மணலாற்று பகுதியிலும் இதே நடவடிக்கையினைத்தான் செய்துள்ளார்கள்.

இதன் காரணமாகத்தான் மதமாற்றங்கள். பௌத்த சின்னங்களை வேண்டும் என்று புதைத்துவிட்டு தோண்டி எடுக்கும் நடவடிக்கைகளைத் தவிருங்கள் என்று கேட்டிருந்தோம். இல்லை இதில் ஆய்வு செய்கின்றோம் என்று தொல்லியல் திணைக்களம் சொல்லி இருந்தது.

இருந்தாலும் இன்று 632 ஏக்கர் நிலத்தைத் தொல்லியல் திணைக்களத்திற்குரிய நிலமாக இரவோடு இரவாக யாருடைய அனுமதியும் இன்றி பிரதேச செயலம், மாவட்ட செயலகமோ, விவசாய திணைக்களத்தின் அனுமதி இன்றி ஒரு ஞாயிற்றுக்கிழமை – கடந்த 11 ஆம் திகதி அதிகாலை வேளை – நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையினை தொல்லியல் திணைக்களம் செய்திருந்து.

நாட்டில் இன்று அரிசி இல்லை,மா இல்லை. கஞ்சி குடிக்கும் நிலையில் இருக்கும் போது 632 ஏக்கர் நிலத்தில் எதை அரசாங்கம் செய்யப்போகின்றது?

கட்டுவதற்கு காவிதுணி இல்லாமல் நாட்டின் பௌத்த துறவிகள் வீதிகளில் அலைந்து திரிகின்றார்கள். பொருளாதாரம்? நலிவுற்று மக்களுக்கு எந்த விதமான விமோசனமும் இல்லாத நிலையில் நாலு லீற்றர் பெற்றோலுடன் நாம் அலைகின்றோம். இந்த நிலையில் 632 ஏக்கர் காணி இவர்களுக்கு எதற்கு? இது வெளிப்படையான நிலஆக்கிரமிப்பும் இனசமத்துவத்தினை அழிக்கும் நடவடிக்கையுமாகும்.

நீதிமன்ற கட்டளைகளையைக் கூட புறந்தள்ளுகின்றார்கள். காவி உடை தரித்த தேரரால் மாவட்ட நீதிமன்றக் கட்டளையச்சிப் புறம்தள்ளி தொடர்ச்சியாக இராணுவத்தை வைத்துக் கட்டுமானங்களை மேற்கொள்ளமுடியும் என்றால் நீதி எங்கே இருக்கின்றது?

இதனை சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உடனடியாகக் கருத்தில் எடுப்பதுடன் எமது தமிழ் அரசியல்வாதிகள் அத்தனை பேரும் இதுதொடர்பில் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்துவதுடன் சர்வதேச ரீதியாக வெளிக்கொண்டு வருவதற்கான தார்மீக வேலையை உடனடியாக மேற்கொள். வேண்டும்.

அம்பாறையில் பட்டிப்பளை ஆற்றில் தொடங்கி இன்று முல்லைத்தீவு மாவட்டம் தாண்டிய நிலையில் இருக்கின்றோம். முல்லைத்தீவில் குள ஆக்கிரமிப்பு நிறைவடைந்து விட்டது. வெகுவிரைவில் வடமராட்சியிலும்தென்மராட்சியிலும்வலிகாமத்திலும் இந்த நடவடிக்கைகள் தொடரும். அப்போதாவது தமிழ் தலைமைகள் விழித்தெழுகின்றனவா என்பதை சிறிது காலம் பொறுத்திருந்தால் விளங்கிக்கொள்ளமுடியும்.

குருந்தூர் மலை நில ஆக்கிரமிப்புக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டம் நாளை 21 ஆம் திகதியில் இருந்து மேற்கொள்ளவுள்ளோம்.

நில ஆக்கிரமிப்பு செய்வதற்காக தொல்லியல் திணைக்களத்தினால் சுயாதீனமாக – தான்தோன்றித்தனமாக – அடையாளம் இடப்பட்ட 632 ஏக்கர் எல்லைக்கற்கள் இருக்கின்றன. அந்த எல்லைக்கற்களை அளந்து வரைபடமாக வெளியிடுவதற்கு நில அளவைத்திணைக்களத்தின் நில அளவையாளர்கள் நாளை 21 ஆம் திகதி வருகை தருவார்கள். அந்த நேரத்தில் இருந்து தொடர்ச்சியான போராட்டம் ஆரம்பமாகும். எமது இந்த போராட்டத்திற்கு அனைத்து தமிழ் உள்ளங்களும் திரண்டு வந்து எமது வாழ்வியலையும் எமது நிலத்தினையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தண்ணிமுறிப்பு கிராமா அபிவிருத்தி சங்க தலைவர் கலைச்செல்வன் கருத்து தெரிவிக்கையில் –

1984 ஆம் ஆண்டு தண்ணிமுறிப்பு பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இதுவரைக்கும் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. இது தொடர்பில் பிரதேச செயலகத்திலும் மாவட்ட செயலத்திலும் முறையிட்டும் இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இன்று தொல்பொருள் திணைக்களம் கல்லுப்போடுவதற்கு காரணம் இவர்கள்தான். இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்திருக்கவேண்டும். ஆனால் செய்யவில்லை. எங்கள்மக்களுக்கானகாணியை வழங்குங்கள் என்று கோரியிருந்தோம். எதுவும்செய்து தரப்படவில்லை. குருந்தூர் மலைக்கு செல்லும் முதலாவது காணி எங்களின் காணி. இன்று எங்கள் காணியில் தென்னம்பிள்ளை,கிணறு என்பன இருக்கின்றன. பழைய கட்டடங்கள் என்பனவும் இருக்கின்றன.

மக்கள் வாழ்கின்ற குடியிருப்பு இடமான தண்ணிமுறிப்பு 51 ஆம் கண்டம். இந்த இடத்திலும் தொல்பொருள் திணைக்களம் கல்லு நாட்டி காணியை அபகரித்துள்ளார்கள்.

அதோபோல் குருந்தூர் குளத்தையும் குளத்தின் கீழ் உள்ள தனியார் வயல் காணிகளையும் அபகரித்து தொல்பொருள் திணைக்களம் கல்லு நாட்டியுள்ளது. இதனை யாரிடம் சொல்வது? இந்த அதிகாரம் மிக்க அதிகாரிகள் இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். – என்றார்.

## உக்ரைனில் ரஷ்யப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாரக பாலசூரிய தெரிவித்துள்ளார்.

அவர்கள் சட்டவிரோதமான முறையில் ஐரோப்பாவிற்கு பயணிக்க முயற்சித்த குழுவினர் என அமைச்சர் கூறுகிறார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற ஆரம்ப காலத்தில் உக்ரைனில் இருந்து இந்த நாட்டுக்கு வருவதற்கு தயாராக இருந்த இலங்கையர்கள் அனைவரும் அழைத்து வரப்பட்டனர் என அவர் தெரிவித்தார்.

முன்னதாக இந்த ஏழு பேரின் படங்கள் ஊடகங்களில் வெளியாகின. உக்ரைன் ஊடகவியலாளர்ஒருவர் தனது டுவிட்டர் கணக்கில் அவற்றை வெளியிட்டார்.

இந்த இலங்கையர்கள் ரஷ்யப் படையினரால் சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம் –
076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir

# அமெரிக்கா போன்றவை இலங்கையை பகடைக்காயாகப் பயன்படுத்துகின்றன!

## சார்ள்ஸ் எம்.பி. சாடல்



தமிழர்களின் விடயங்களைப் பயன்படுத்தி, அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையை பகடைக்காயாகப் பயன்படுத்துகின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று (திங்கட்கிழமை) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில், மனித உரிமை உதவி ஆணையாளர் இலங்கை தொடர்பான பரிந்துரைகளை முன் வைத்துள்ளார்.

வடக்கு கிழக்கில் தொடர்ச்சியாகத் தமிழ் மக்கள் இலங்கை அரசாங்கத்தால் நீண்ட காலமாக துன்புறுத்தப்பட்டு,கடைசியாக 2009 ஆம் ஆண்டு, தமிழ் இனத்தை இனப் படுகொலையாக அழித்த சம்பவங்கள் தொடர்ச்சியாக சர்வதேச நாடுகள் ஊடாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு வரும் என்று நம்புகின்றார்கள்.

ஆனால் சர்வதேச நாடுகளைப் பொருத்தவரையில் இலங்கையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைப்பதற்காகத் தமிழர்களின் விடயங்களைப் பயன்படுத்தி, அமெரிக்கா போன்ற நாடுகள், இலங்கையைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைப்பதற்குப் பகடைக்காயாகப் பயன்படுத்துகின்றன என நான் பார்க்கின்றேன்.

சர்வதேச விசாரணை வேண்டும் என்று தொடர்ச்சியாகத் தாயகம், புலத்தில் இருக்கின்ற சகல தரப்பினரும் ஒன்றிணைந்து ஒருமித்து கோரிக்கை முன் வைத்தபோதும்,ஐ.நா.மனித உரிமைகள் பேரவையைக் கையாளுகின்ற நாடுகள் ஒரு மென் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றன..

தற்போது வந்துள்ள பரிந்துரையில் பல விடயங்கள் இருந்தாலும், தீர்மானம் ஒன்று நிறைவேறும் போது, பிரேரணை எந்தவித பயனும் இல்லாத ஒன்றாகக் காணப்படும்.

இலங்கை அரசாங்கம் ஐ.நாவில் எப்படியான தீர்மானங்களை நிறைவேற்றினாலும், இலங்கை அரசாங்கம் இவ்வளவு காலமும்,ஐ.நா. பரிந்துரைகளுக்கும், தீர்மானங்களையும் நிறைவேற்ற எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

தற்போதைய பரிந்துரையின் போது அமைச்சர் அலி சப்ரி, அதற்கு உடன்படமாட்டோம் என்று கூறியிருக்கிறார்.

தொடர்ச்சியாகத் தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகின்ற ஒரு சூழ்நிலையும்,மேற்குலக நாடுகளும் தமிழர் தரப்பை தொடர்ச்சியாக ஏமாற்றுகின்ற சூழ்நிலை தான் தொடர்ச்சியாகக் காணப்படுகின்றது – என அவர் மேலும் தெரிவித்தார்.

# தாமரைக் கோபுரத்தைப் பார்வையிட வழங்கப்பட்டுள்ள நேரத்தில் மாற்றம்!



தாமரைக் கோபுரத்தைப் பார்வையிட பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருந்த நேரம் மாற்றப்பட்டுள்ளது.

அதன்படி வார நாள்களில் பகல் 12 மணி முதல் இரவு 10 மணி வரை தாமரை கோபுரத்தை பொதுமக்கள் பார்வையிடலாம் என அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

அதேபோல, வார இறுதி நாள்களிலும் நேரம் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும் அதன்படி காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை தாமரைக் கோபுரத்தைப் பார்வையிட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# உலக உணவுத் திட்ட அறிக்கையை விவசாய அமைச்சு மறைக்க முயற்சி!

## சஜித் குற்றச்சாட்டு

நாட்டின் சனத்தொகையில் 63 லட்சம் பேர் உணவு பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவித்து உலக உணவுத் திட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையை விவசாய அமைச்சர் மறைத்து செயற்படுகின்றார் என எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

மக்களின் நெருக்கடிக்குத் தீர்வுகாண கூட்டு அரசாங்கத்தை அமைக்கப் போவதில்லை என்றும் அவர் இதன் போது குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் மக்களின் ஆணையை காட்டிக்கொடுக்கும் நிலைப்பாடுகளை எடுக்கமாட்டார்கள் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# திலீபனின் நினைவேந்தலை மேற்கொள்வதற்கு பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது!

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை மேற்கொள்வதற்காக 15 பேரைக் கொண்ட பொதுக் கட்டமைப்பு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தியாகதீபம் திலீபனை நினைவேந்தலை மேற்கொள்ள பொதுக் கட்டமைப்பொன்றை உருவாக்கி முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்றது.

யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் ஏற்பாட்டில் நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் தொடர்ச்சியாக நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நேற்று இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கடந்த கூட்டத்தில் பொதுக் கட்டமைப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டு ஏழு பேர் கொண்ட பொதுக் கட்டமைப்புக்கான அழைப்பாளர் குழு தெரிவு செய்யப்பட்டநிலையில் அந்தக் குழு, கலந்துரையாடலில் பங்கேற்காத அமைப்புகள், அரசியல் கட்சிகள் என்பனவற்றுடன் கலந்துரையாடி பொதுக்கட்டமைப்பை உருவாக்கி



நினைவேந்தலை சிறப்பாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டநிலையில், மதகுருமார்கள், யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள், அரசியல் கைதிகளுக்கான அமைப்பின் பிரதிநிதி, சிவில் சமூகப் பிரதிநிதிகள், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர் என 15 பேரைக் கொண்ட பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

# முன்பதிவு செய்தவர்களுக்கே கடவுச் சீட்டு வழங்கப்படுமாம்!

## குடிவரவு – குடியகல்வுத் திணைக்களம் அறிவிப்பு

கடவுச்சீட்டைப் பெறுவதற்கு முன்பதிவு செய்தவர்களுக்கே சேவை இடம்பெறும் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள் ஊடாகத் தமது சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நேற்று தேசிய துக்க தினம் என்பதால் அந்தத் திணைக்களத்தால் வழங்கப்படும் ஏனைய சேவைகள் எவையும் இடம்பெறாதமை குறிப்பிடத்தக்கது.

# கௌரவமான அரசியல்தீர்வை வலியுறுத்தி மன்னாரில் நேற்றுப் பறந்தன பட்டங்கள்!


வடக்கு – கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை நோக்கிய பயணத்தில் 50 ஆவது தினத்தை முன்னிட்டு நேற்று (திங்கட்கிழமை) மன்னார் கீரி கடற்கரை பகுதியில் கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்தி பட்டங்கள் ஏற்றப்பட்டன.

“கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்” எனும் தொனிப் பொருளில் வடக்கு – கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் 100 நாள்கள் நடைபெற உள்ள செயற்திட்டத்தின் 50 ஆவது நாள் கவனவீர்ப்பு போராட்டம் வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மன்னார் கீரி கடற்கரை பகுதியில் காலை இடம்பெற்றது.

சிறுவர்கள், பொது மக்கள், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பெண்கள் இணைந்து தமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தனர்.

மேலும் பறக்கவிடப்பட்ட பட்டங்களில் எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை உள்ளிட்ட வசனங்கள் எழுதப்பட்டு பறக்கவிடப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ்.திலீபன், கிராம மட்ட அமைப்பினர், விவசாய, மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்பினர், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், மனித உரிமை ஆர்வலர்கள்,



வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டம் வடக்கு – கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாள்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.09.2022இல் வெளியிடப்பெற்றது.